**தமிழ்நாடு அரசு - நகர் ஊரமைப்புத் துறை**
**உறுப்பினர் செயலர்(பொ), ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம், ஒசூர், அவர்களின் நடவடிக்கைகள்**

**முன்னிலை:திரு.சு.சங்கரமூர்த்தி,பி.இ.**

ந.க. எண்.78/2018/ஒ.பு.ந.வ.கு நாள்:18 .07.2018.

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவுகள் - மனைகள் வரன்முறைப்படுத்துதல் - திட்டம், 2017 - ஒசூர் வட்டம் - அச்செட்டிப்பள்ளி கிராமம் சர்வே எண்கள்: 750/1,749/2A,749/2B,909/2A,909/1,911/3,916/2,911/2A1, 121/1C,121/3B,121/1B2,121/2,125/4C,125/5C,120/1B,120/1A, 121/1A,122/1A,122/1B,121/1B1,121/3A ஆகியவற்றில் 11.40 ஏக்கர் (496584.00 ச.அடி) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவில் ஒப்புதல் வழங்குதல் தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்:78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ4(3) நாள்: 04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்:172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ4(3) நாள்:13.10..2017.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை - 2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்:13193/2017/எல்எ2 நாள்:30.10.2017, 31.10.17, 07.11.17, 17.11.2017 மற்றும் 20.12.2017.
4. மனுதாரர் திரு.T.V. வரதராஜன் ஓசூர் அவர்களின் விண்ணப்பம் நாள்: 09.01.2018

--------------

**உத்தரவு:**

பார்வை (1) மற்றும் (2)-ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை (3)-ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை (4)-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம் - அச்செட்டிப்பள்ளி கிராமம் சர்வே எண்கள்: 750/1,749/2A,749/2B,909/2A,909/1,911/3,916/2,911/2A1,121/1C,121/3B,121/1B2, 121/2,125/4C,125/5C,120/1B,120/1A,121/1A,122/1A,122/1B,121/1B1,121/3Aஆகியவற்றில் 11.40 ஏக்கர் (496584.00 ச.அடி) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ/ஒபுநவகு(வரன்முறை) எண்:100/2018** என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு | : | 496584.00 ச.அடி |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 13 |
| விற்கப்பட்ட மனை எண்கள் | : | 01,09,13,15,16,17,18,35,36,37,38,39,43, |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 177 |
| விற்கப்படாத மனைகளின் எண்கள் | : | 2-8,10-12,14,15A,19-34,40-42,44-136,136A,137-147,147A,148-187 |
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு | : | 320392.00 ச.அடி |
| திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு | : | 36679.70 (10.08) ச.அடி |

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்:**

1. **<u>பரிசீலனைக் கட்டணம்:</u>**

| | |
|---|---|
| இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் பரிசீலனைக் கட்டணமாக மனைப்பிரிவில் அமையும் அனைத்து மனைகளுக்கும் இணையதளம் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. |

2. **வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்.(உதாரணமாக)**

| மனை எண் | பரப்பளவு ச.மீ | வரன்முறைப்படுத்தும் கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் முப்பது மட்டும்) | வளர்ச்சிக் கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/- ரூபாய் வீதம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் இருபத்தைந்து மட்டும்) |
|---|---|---|---|
| 01 | 166.01 | 166.01X 30 = ரூ.4981/- | 166.01X 25 = ரூ.4151 /- |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் இணையதளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

**அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு:**

| | |
|---|---|
| 0217 Urban Development - 60 Other Urban Development Scheme - 800 Other receipts At Receipts under Regularization Charges of Unapproved layout and Plots - DTCP (DPC: 0217 60 800 AT 0007) | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

**ஆ) வளர்ச்சிக் கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.**

வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண் ஆகியவற்றினை சம்மந்தப்பட்ட உள்ளாட்சியிடம் விவரம் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும் விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்மந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை (1)மற்றும் (2)-ல் சுட்டிய அரசாணைகளின் படி மேற்காணும் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்:</u>**

1. அரசாணை (நிலை) எண்:172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்:13.10.17-ல் விதி எண்:7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் (ம) திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்மந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

உறுப்பினர் செயலர் (பொ)
ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம்,
ஒசூர்.

18/7/18

**இணைப்பு:** மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்

பெறுநர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
ஒசூர் ஊராட்சி ஒன்றியம்,
ஒசூர்.

நகல்:

1. மனுதாரர்
   திரு.T.V.வரதராஜன்,S/O.(லேட்)T.R.விஸ்வநாதன்,
   அச்செட்டிப்பள்ளி கிராமம்,
   ஒசூர் ஊராட்சி ஒன்றியம்,
   கிருஷ்ணகிரி மாவட்டம்.
2. உதவி இயக்குநர் (நில அளவை)
   கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் வளாகம்,
   கிருஷ்ணகிரி
3. வட்டாட்சியர்,
   வட்டாட்சியர் அலுவலகம்,
   கிருஷ்ணகிரி மாவட்டம்,

   } சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு (வரைபடம் ஒரு தொகுப்பு).

4. சார் பதிவாளர்,
   சார் பதிவாளர் அலுவலகம்,
   கிருஷ்ணகிரி மாவட்டம்.

   } சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு.( வரைபடம் ஒரு தொகுப்பு).

5. தோழில்நுட்ப வைப்பறை : ஒரு வரைபட தொகுப்பு.